# அர்சு (Ersu)




**வசிப்பிடம்:** கி.பி. 1983 ல் நடத்தப்பட்ட ஆய்வின்படி 20,000 அர்சு மக்கள் தாதோ (Dadu) நதியின் கீழ்ப்பகுதியின் கரையோரங்களில் தென் சீனாவின் சிசுவான் மாநிலத்தின் ஏழு வெவ்வேறு மாவட்டங்களில் வசிக்கின்றனர். தாதோ நதி சிசுவான்-சிங்ஹாய் எல்லைப் பகுதியில் உள்ள கொலொக் (Golog) மலையில் உற்பத்தியாகி 1,155 கி.மி. ஓடி மின் (Min) நதியில் கலக்கிறது. மிகக்குறைந்த ஜனத்தொகை இருந்தும் அர்சு மக்கள் மிகப்பரந்த பகுதியில் வசிக்கின்றனர். கன்லுஒ (Ganluo) மாவட்டம் அர்சு மக்களின் வசிப்பிடத்தின் மையமாக இருக்கிறது, இது மாநிலத் தலைநகரமாகிய செங்துவிலிருந்து (Chengdu) எட்டுமணிநேர ரயில் பிரயாணத் தொலைவிலுள்ளது.

**அடையாளம்:** சீனாவில் அர்சு மக்கள் அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்கள் எனக் கருதப்படுகின்றனர். ஆனால் கி.பி 1980 களில் இவர்கள் தங்களை ஷிபன் என்ற பெயரில் ஒரு சிறுபான்மை இனப் பிரிவை உருவாக்கி அதில் இணைக்கும்படி கேட்டனர், மத்திய அரசு இவர்களது கோரிக்கையை இன்று வரையும் ஏற்றுக்கொள்ளவில்லை. மொழியியலாளர் சுன் ஹாங்கை சொல்லுகிறார் “அர்சு மொழி பேசுகிறவர்கள் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களைக் கொண்டுள்ளனர். கன்லுஒ, யுயெஷி (Yuexi) மற்றும் ஹயுஅன் (Hanyuan) பகுதிகளில் வாழ்பவர்கள் தங்களை அர்சு, புஅர்ச் (Buerzi) அல்லது அர்சுபுஅர்ச் என்றும் ஷிமியன் (Shimian) பகுதிகளில் வாழ்வோர் லூசு (Lusu) என்றும் ஜியுலாங் (Jiulong) மற்றும் மேற்கு மியன்னிங் (Mianning) பகுதிகளில் வாழ்வோர் லிசு (Lisu) என்றும் கூறுகின்றனர். “வெள்ளை மக்கள்” என்கிற அர்த்தமுடைய வார்த்தை மொழியின் வெவ்வேறு பேச்சுவழக்கின் காரணமாக திரிந்து இந்தச் சுயப்பெயர்கள் உண்டாகின.”

**மொழி:** அர்சு மொழி மூன்று பிரிவுகளையும் மூன்று உச்சரிப்பு வகைகளையும் கொண்டது. இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று மிகுந்த வித்தியாசமுடையவை. அர்சு மக்கள் பழமையான சித்திர எழுத்துக்களைப் பயன்படுத்துவதில் அறியப்பட்டவர்கள். அர்சு மக்கள் இதை எங்கிருந்து பெற்றிருக்கக்கூடும் என ஆய்வு செய்யும் அறிஞர்களை இது குழப்பமடையவும் வியப்படையவும் செய்திருக்கிறது. ஓர் அறிஞரின்படி ‘திபெத்-சீனா-வெய்வர் (Uighur) எல்லைகளில் ஒருகாலத்தில் ஆட்சி செய்து பதிமூன்றாம் நூற்றாண்டுகளில் மங்கோலியர்களால் அழிக்கப்பட்ட சாம்ராஜ்யத்தில் பேசப்பட்ட மறைந்துபோன ஷிஷ்யாவ் (Xixia) மொழியின் மறைமுக வழித்தோன்றலாக அர்சு மொழி இருக்கக்கூடும். பதினோராம் நூற்றாண்டுகளில் கண்டுபிடிக்கப்பட்ட சுருக்கெழுத்துச்சொல் (Logogram) முறையைக்கொண்டு ஷிஷ்யாவ் மொழியில் எழுதப்பட்ட காவியம் இன்றுவரை உள்ளது.

**வரலாறு:** அர்சு மக்களின் தோற்றம் பற்றிய விவரங்கள் உறுதியாக்கப்படமுடியாத நிலையில் உள்ளது. இவர்கள் தங்கள் மூதாதையர் சுமார் 200 ஆண்டுகளுக்குமுன் லாசாவிலிருந்து வந்தனர் என நம்புகின்றனர். அந்நாள்களிலிருந்து இவர்கள் சீன, இ (Yi) மற்றும் திபெத்திய சமுதாயங்களுக்கு அருகாமையில் வாழ்ந்துவருகின்றனர் மற்றும் இந்த மூன்று இனக் கலாச்சாரங்களையும் தங்களுடைய அடையாளத்திற்குள் உட்கிரகித்துக்கொண்டுள்ளனர்.

**மதம்:** அர்சு மக்கள் பெயரளவில் திபெத்திய புத்த மதத்தினர். சிலர் மட்டுமே மதத்தைக் கருத்துடன் பின்பற்றுகின்றனர். இவர்களுக்கு ஆராதிக்கும்படி கோயில் எதுவுமில்லை. மியன்னிங்கில் உள்ள 3,000 அர்சு மக்களுக்கு மொத்தம் இரண்டு பூசாரிகள் மட்டுமே உண்டு, இவர்கள் இருவருமே மியன்னிங் நகரத்தில் வசிக்கின்றனர். மரித்தோரை அடக்கம்பண்ண இவர்கள் கிராமங்களுக்கு வருகின்றனர். இவர்களுடைய கடைசியான பொன் (Bon) கோயில் கி.பி. 1960 களில் சீனக் கலாச்சார எழுச்சியின்போது இடிக்கப்பட்டது.

**கிறிஸ்துவம்:** இதுவரை அறியப்பட்ட அர்சு சபையோ விசுவாசியோ இல்லை. தி பார்டர் மிஷன் ஆப் தி சர்ச் ஆப் கிறிஸ்ட் இன் சைனா (The Border Mission of the Church of Christ in China) மற்றும் அமெரிக்கன் பாப்டிஸ்ட்கள் கி.பி. 1949 வரைக்கும் இவர்களோடு தொடர்புடைய சியாரோங் (Jiarong) மக்கள் மத்தியில் பணி செய்தனர். இருந்தும் அர்சு மக்கள் மத்தியில் பணி செய்ததாக எந்தத் தகவலுமில்லை.




**Population:**
27,850 (2000)
34,350 (2010)
42,300 (2020)

**Countries:** China

**Buddhism:** Tibetan

**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Duoxu, Ersu Yi, Tosu, Buerzi, Ersubuerzi, Lusu, Lisu

**மக்கள்தொகை:** 20,000 in China (1983, Sun Hongkai)

**மொழிப்பிரிவு:** **சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, தன்குத்-ஷியாங், ஷியங் மொழி**

**மொழி வழக்குகள்:** 3 (Eastern Ersu [13,000], Central Ersu [Duoxu] [3,000], Western Ersu [Lisu] [4,000])

**திபெத்திய புத்தமதம் :** 50%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** ERS

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்